# சேலம் மாவட்டத்தில் "நலம் காக்கும் ஸ்டாலின்" மருத்துவ முகாம்!

## அமைச்சர் இரா.இராஜேந்திரன் நேரில் ஆய்வு!



சேலம், ஜன.3-

சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் சேலம் மாவட்டம், ஜாகீர் அம்மா பாளையம், அரசு மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் நேற்று (02.01.2026) நடைபெற்று வரும் "நலம் காக்கும் ஸ்டாலின்" மாபெரும் சிறப்பு மருத்துவ முகாமினை மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா. பி ரு ந் த ா தே வி , முன்னிலையில் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வுக்குப்பின்னர் சுற்றுலாத்துறை அமைச்சர் இரா. இராஜேந்திரன் தெரிவித்ததாவது:-

முதலமைச்சர் அவர்கள் சென்னையில் இருந்து காணொலி காட்சியின் வாயிலாக "நலம் காக்கும் ஸ்டாலின்" மாபெரும் சிறப்பு மருத்துவ முகாமினை 02.08.2025 அன்று தொடங்கி வைத்தார்கள். அதனைத்தொடர்ந்து அன்றைய தினம் சேலம் மாநகராட்சி, மணக்காடு, காமராஜர் பெண்கள் மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் "நலம் காக்கும் ஸ்டாலின்" மாபெரும் சிறப்பு மருத்துவ முகாமானது தொடங்கி வைக்கப்பட்டது.

குறிப்பாக சேலம் மாவட்டத்தில் இதுவரை நடத்தப்பட்ட 30 மருத்துவ முகாம்களில் 18,192 ஆண்களும், 24,932 பெண்களும் என மொத்தம் 43,124 பயனாளிகள் கலந்துகொண்டு பயன் பெற்று உள்ளனர். இதில் 32,983 நபர்களுக்கு இரத்தப் பரிசோதனையும், 29,597 நபர்களுக்கு இசிஜி பரிசோதனையும், 4,318 நபர்களுக்கு அல்ட்ரா சவுண்ட் ஸ்கேன் பரிசோதனை, 4,663 நபர்களுக்கு எக்கோ பரிசோதனையும் மற்றும் 3,057 நபர்களுக்கு எக்ஸ்ரே பரிசோதனையும் மேற்கொள்ளப்பட்டு உரிய ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன.

அதன் தொடர்ச்சியாக இன்றைய தினம் 02.01.2026 இச்சிறப்பு மருத்துவ முகாமானது சேலம் வட்டாரம், ஜாகீர் அம்மாபாளையம், அரசு மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் நடத்தப்படுகிறது. நலம் காக்கும் ஸ்டாலின் திட்டத்தின் கீழ் மாபெரும் சிறப்பு மருத்துவ முகாமில் கலந்து கொள்ளும் அனைவருக்கும் இரத்த பரிசோதனை, இ.சி.ஜி உள்ளிட்ட பரிசோதனைகள் அனைத்தும் இலவசமாக செய்யப்படுகிறது.

மேலும், இம்மருத்துவ முகாமில் பொது மருத்துவம், இருதய மருத்துவம், எலும்பு மருத்துவம், நரம்பியல் மருத்துவம், தோல் மருத்துவம் மற்றும் மகப்பேறு மருத்துவம் உட்பட 17 வகையான சிறப்பு மருத்துவ துறைகள் சார்ந்த சிறப்பு மருத்துவ நிபுணர்கள் கொண்டு மருத்துவ சேவைகள் வழங்கப்பட்டு வருகிறது. இவ்வாறு சுற்றுலாத் துறை அமைச்சர் இரா. இராஜேந்திரன் அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் சேலம் மாநகராட்சி மேயர் ஆ. ராமச்சந்திரன், மாநகராட்சி ஆணையாளர் மா.இளங்கோவன், துணை மேயர் திருமதி மா.சாரதாதேவி, இணை இயக்குநர் (நலப்பணிகள்) மரு.நந்தினி, மாவட்ட சுகாதார அலுவலர் (சேலம்) மரு.சௌண்டம்மாள், மாநகர நல அலுவலர் மரு.முரளி சங்கர் உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




தருமபுரி மேற்கு மாவட்டக் கழக அலுவலகத்தில் நடைபெற்ற செயற்குழுக் கூட்டத்தில் தருமபுரி மேற்கு மாவட்ட செயலாளர் முனைவர். பி.பழனியப்பன் நோ MAPPING LIST ல் விடுபட்டுள்ள நமது வாக்காளர்களை அடையாளம் கண்டு சேர்க்கும் பணியை துரிதப்படுத்த பல்வேறு ஆலோசனைகளை வழங்கி பேசினார். உடன் அவைத்தலைவர் கே.மனோகரன்,மாநில நிர்வாகி சூடப்பட்டி சுப்ரமணி, மூத்த வழக்கறிஞர். டி.சந்திரசேகர், மாவட்ட நிர்வாகிகள் முருகன், ராஜகுமாரி, தேர்தல் பார்வையாளர் அரியப்பன் மற்றும் ஒன்றிய, பேரூர் கழகத்தினர், அணிகளின் அமைப்பாளர்கள் தேர்தல் பணிக்குழு ஒருங்கிணைப்பாளர்கள் உள்ளிட்ட தி.மு.க.வினர் கலந்து கொண்டனர்.

### "என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி" இன்று

# சென்னை கிழக்கு மாவட்டத்தில் பாகவாரியாக நடைபெறும் கூட்டங்கள்!

## மாவட்டச் செயலாளர் — அமைச்சர் பி.கே.சேகர்பாபு அறிவிப்பு!



சென்னை,ஜன.3-

கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் 8.12.2025 அன்று என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி என்ற தலைப்பில் காணொலி காட்சி வாயிலாக நடைபெற்ற திமுக மாவட்ட கழக செயலாளர் கூட்டத்தில் எடுக்கப்பட்ட செயல்திட்டத்தின் படி 03.01.2026 சனிக்கிழமை அன்று சென்னை கிழக்கு மாவட்டத்தில் பாகவாரியாக நடைபெறும் கூட்டங்கள் விவரம்.

கொளத்தூர் கிழக்கு பகுதி

மாலை: 4.00 மணி: வட்டம் 67அ , பாகம் 139 , இடம்: எண்: 11, எழுமலை தெரு, ஜார்ஜ் காலனி, பெரம்பூர், சென்னை- 11.

மாலை: 4.30 மணி: வட்டம் 67அ , பாகம் 148 , இடம்: எண்:3, தீட்டி தோட்டம் 4வது தெரு, பெரம்பூர், சென்னை- 11.

மாலை: 5.00 மணி: வட்டம் 67அ , பாகம் 149 , இடம்: எண்:22, தீட்டி தோட்டம் 6வது குறுக்கு தெரு, பெரம்பூர், சென்னை- 11.

மாலை: 5.30 மணி: வட்டம் 67அ , பாகம் 152 , இடம்: எண்:4, ஜானகி ராம் நகர், பெரம்பூர், சென்னை- 11.

கொளத்தூர் மேற்கு பகுதி

மாலை: 4.00 மணி: வட்டம் 64அ , பாகம்36 , இடம்: 39வது தெரு, G.K.M. காலனி, சென்னை-82.

மாலை: 4.30 மணி: வட்டம் 65அ , பாகம் 61, 62 , இடம்: வரதன்குட்டை, கொளத்தூர், சென்னை-99.

மாலை: 5.00 மணி: வட்டம் 65அ , பாகம் 62 , இடம்: ஜெயராம் நகர், கொளத்தூர்.

மாலை: 5.30 மணி: வட்டம் 66 , பாகம்75 , இடம்: ஸ்ரீ நகர் காலனி, கொளத்தூர்.

மாலை: 6.00 மணி: வட்டம் 69 , பாகம் 207 , இடம்: முத்து குமரப்பா சாலை, சென்னை-82.

துறைமுகம் கிழக்கு பகுதி

மாலை: 6.00 மணி: வட்டம் 56 , பாகம் 71, 76, 77, 78, 79, இடம்: சகாய மாதா, 40 பிடாரியார் கோயில் தெரு, பிராட்வே.

துறைமுகம் மேற்கு பகுதி

மாலை: 4.30 மணி: வட்டம் 54ஆ , பாகம்: 20, 21, 22 , இடம்: தங்கசாலை தெரு, சென்னை.

எழும்பூர் வடக்கு பகுதி

மாலை: 4.00 மணி: வட்டம் 77அ , பாகம் 62, 67, 64.

எழும்பூர் தெற்கு பகுதி

மாலை: 4.00 மணி: வட்டம் 108 , பாகம் 127, 128, 130 , இடம்: தாஸ்புரம் சேத்துப் பட்டு.

வில்லிவாக்கம் கிழக்கு பகுதி

மாலை: 4.00 மணி: வட்டம் 98 , பாகம் 226, 228, 232 , இடம்: அம்பேத்கர் நகர் 3வது தெரு, திருவள்ளுவர் நகர், மாதா கோயில் தெரு, திருவள்ளுவர் நகர் கலைஞர் தெரு, காமராஜர் மெயின் தெரு, டி பிளாக் அரசு அலுவலர் குடியிருப்பு, சோலையம்மன் கோயில் தெரு.

வில்லிவாக்கம் மேற்கு பகுதி

மாலை: 5.00 மணி: வட்டம் 104 , பாகம் 103, 104, 112 , இடம்: 10வது மெயின்ரோடு, ஜி.பிளாக், 17வது தெரு, கதிரவன் காலனி.

மாலை: 6.00 மணி: வட்டம் 104அ , பாகம் 123, 124, 129 , இடம்: ஜவஹர்லால் நேரு சாலை, சிபிடபிள்யூ குடியிருப்பு, நேரு நகர், 3வது தெரு.

அம்பத்தூர் வடக்கு பகுதி.

மாலை: 4.00 மணி: வட்டம் 79அ , பாகம் 111 , இடம்: 10வது மெயின்ரோடு, லெனின் நகர்

மாலை: 4.30 மணி: வட்டம் 81 , பாகம் 125 , இடம்: கே. கே.ரோடு

மாலை: 6.00 மணி: வட்டம் 81 , பாகம் 149 , இடம்: சேகரன் தெரு

மாலை: 6.30 மணி: வட்டம் 80 , பாகம் 13 , இடம்: பத்ரகாளி அம்மன் கோயில் தெரு, பானு நகர்

மாலை: 7.00 மணி: வட்டம் 80 , பாகம் 8 , இடம்: 1வது அவென்யு

மாலை: 7.30 மணி: வட்டம் 85 , பாகம் 164 , இடம்: அகஸ்தியர் தெரு, ராமாபுரம்

மாலை: 8.00 மணி: வட்டம் 85 , பாகம் 224 , இடம்: குளக்கரை தெரு, காமராஜபுரம்

மாலை: 8.30 மணி: வட்டம் 86 , பாகம் 244 , இடம்: பஜனை கோவில் தெரு, அத்திப்பட்டு.

அம்பத்தூர் தெற்கு பகுதி.

மாலை: 5.00 மணி: வட்டம் 93 , பாகம் 317 , இடம்:கோல்டன்ராஜ் நகர், வசந்தா தெரு,

மாலை: 5.30 மணி: வட்டம் 93 , பாகம் 320 , இடம்: பாடிகுப்பம், நேரு தெரு.

அம்பத்தூர் கிழக்கு பகுதி.

மாலை: 5.00 மணி: வட்டம் 177 , பாகம் 177 , இடம்: பெரியார் நகர், கொரட்டூர், சென்னை-80

மாலை: 5.30 மணி: வட்டம் 82 , பாகம் 63 , இடம்: பிரிதி விபாக்கம், 2வது அவென்யு, அம்பத்தூர், சென்னை-53.

மாலை: 6.00 மணி: வட்டம் 82 , பாகம் 64 , இடம்: பிரிதி வாக்கம், லோயர்கேனல் ரோடு, அம்பத்தூர், சென்னை-53.

மாலை: 6.30 மணி: வட்டம் 82அ , பாகம் 35 , இடம்: அன்னை வேளாங்கண்ணி தெரு, கங்கைநகர், கள்ளிகுப்பம், அம்பத்தூர், சென்னை-53.

மேற்கண்ட பாகங்களில் நடைபெறும் கூட்டங்களில் அந்தந்த தொகுதிக்குட்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமை செயற்குழு உறுப்பினர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், தொகுதி பார்வையாளர்கள், பகுதி செயலாளர்கள், வட்ட செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், மாவட்ட/ பகுதி / வட்ட நிர்வாகிகள், பாக பொறுப்பாளர்கள், BLA2, BDA, BLC ஆகியோர் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு மாவட்டச் செயலாளர் அமைச்சர் பி.கே. சேகர்பாபு அறிவித்தள்ளார்.

### காஞ்சி வடக்கு மாவட்ட இளைஞர் அணி – மாணவர் அணி – விளையாட்டு மேம்பாட்டு அணிகளின்

# மாநகர - ஒன்றிய - நகர - பகுதி - பேரூர் அமைப்பாளர்கள் - துணை அமைப்பாளர்கள் கலந்தாலோசனைக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் - – அமைச்சர் தா.மோ. அன்பரசன் தலைமையில் நடைபெறுகிறது!

காஞ்சிபுரம், ஜன.3-

காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட இளைஞர் அணி மாணவர் அணி விளையாட்டு அணிகளின் மாநகர ஒன்றிய நகர- பகுதி பேரூர் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் கலந்தாலோசனைக் கூட்டம் மாவட்ட செயலாளர் அமைச்சர் தா.மோ.அன்பரசன் தலைமையில் நடைபெறுகிறது.

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழக இளைஞர் அணி அமைப்பாளர் கோல்டு டி.பிரகாஷ்- மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் முனைவர் எல்.பிரபு மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் கே.ஆர். சாரதி பெரிய நாயகம் ஆகியோர் இணைந்து வெளியிட்டுள்ள அறிக்கை:

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழக இளைஞர் அணி மாணவர் அணி மற்றும் விளையாட்டு மேம்பாட்டு அணிகளின், மாநகர ஒன்றிய நகர பகுதி பேரூர் கழக அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் கலந்தாலோசனைக் கூட்டம் இன்று (3.01.2026 சனிக்கிழமை) பிற்பகல் 3.00 மணியளவில் ஆலந்தூர் கத்திப்பாரா மேம்பாலம் அருகில் உள்ள மாவட்ட கழக அலுவலகத்தில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழகச் செயலாளர் - அமைச்சர் தா.மோ.அன்பரசன் அவர்களின் தலைமையிலும்,

மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர்கள், மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர்கள், மாவட்ட விளையாட்டு அணி அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர்கள் ஆகியோர் முன்னிலையிலும் நடைபெற உள்ளது.

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழக இளைஞர் அணி மாணவர் அணி விளையாட்டு மேம்பாட்டு அணிகளின், மாநகர ஒன்றிய நகர பேரூர் கழக அமைப்பாளர்கள் அனைவரும் இதனையே அழைப்பாக ஏற்று அவசியம் இக்கூட்டத்தில் கலந்துக் கொண்டு சிறப்பிக்கும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

இக்கூட்டத்தில் மாவட்டத்தில் உள்ள ஒன்றிய - நகர - பகுதிகளில் திராவிட பொங்கல் திருநாளையொட்டி விளையாட்டுப் போட்டிகள் நடத்துவது சம்பந்தமாக கலந்து ஆலோசிக்கப்பட உள்ளது.

இவ்வாறு அவர்கள் அறிக்கையில் கூறியுள்ளனர்.

### முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாளையொட்டி

# "அன்னம் தரும் அமுதகரம்" 317 வது நாள்!

## அம்பத்தூர் கிழக்கு பகுதியில் உணவு வழங்கப்பட்டது!



சென்னை,ஜன.3-

முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு காலை உணவு வழங்கும் சிறப்புமிகு "அன்னம் தரும் அமுதக்கரங்கள்" மாபெரும் திட்டத்தின் 317 ஆம் நாளான - கழகத்தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இனிய பிறந்த நாளை முன்னிட்டு நேற்று (02.01.2026), அம்பத்தூர் கிழக்கு பகுதி: 1) வட்டம் 84, கொரட்டூர் பேருந்து நிலையம் அருகில், 2) வட்டம் 84 ஆ, தொடர்வண்டி சாலை, கொரட்டூர், சென்னை ஆகிய பகுதிகளில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு. பி.கே.சேகர்பாபு அவர்களின் வழிகாட்டுதல்படி தமிழ்நாட்டு நலன்களையும், எதிர்காலத்தையும் யாருக்காவும், எதற்காகவும் விட்டுத்தரமாட்டோம். தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக ஒன்றுபட்டு போராடுவோம். தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் - இதுதான் ஒரே இலக்கு!" என்ற உறுதிமொழியை ஏற்று பொது மக்களுக்கு காலை உணவு வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் ஜோசப் சாமுவேல் எம்.எல்.ஏ, பி.கே.மூர்த்தி.எம்.சி, எம்.டி.ஆர். நாகராஜ், டி. எஸ்.பி.ராஜகோபால் எம்.சி , டாக்டர்.ஜி சாந்தகுமாரி எம்.சி, எல்.பி.எஃப். மோகன், டாக்டர் பூர்ணிமா எம்.சி, ரமேஷ் என்ற நீலகண்டன் எம்.சி து.ஆயிரம், ஜி.வி.நாகவள்ளி எம்.சி, கு.கிருஷ்ணமூர்த்தி அம்பத்தூர்/கிழக்கு வடக்கு/ தெற்கு/ வட்ட கழக செயலாளர்கள்: மு.சண்முகம், ஆ.சுந்தரராஜ், லோகநாதன், சு.மோகன்குமார், மு.விஜயகுமார், த.வ.லால் பி.செந்தில்.வி.ரவிந்திரன், பு.வீரா(எ) வீரராகவன், வெ.ராதாகிருஷ்ணன், த.கண்ணபிரான், எம்.கமல் எம்.சி, டி.பிரகாஷ் தயாளன், சி.சீனிவாசன், எம்.ஈ.சேகர் எம்.சி, நா. நெப்போலியன், ஆர். டீக்கா, ஒருங்கிணைப்பாளர்கள்: சொ.வேலு, S.முரளி, பெரம்பூர் R. ராஜன், K.R.அபரஞ்சி, அசோக் ஜெயின், P.விஜயகுமார், ம.அசோக்குமார், L. சம்பத்குமார், க.பா. பிரதீப்குமார் மற்றும் கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

### இரா.துரைராஜ் தலைமை! மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் முனைவர் த.ஜெகதீசனின் ஆய்வு நூல் –

# 'முத்தமிழறிஞர் கலைஞரின் படைப்புகளில் இன-மொழி உணர்வு' எனும் நூல்!

## அமைச்சர் எ.வ.வேலு வெளியிடுகிறார்! அமைச்சர் மா.சுப்பிரமணியன் பெற்றுக்கொள்கிறார்!

சென்னை, ஜன.3-

சென்னை தெற்கு மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் - முனைவர் த.ஜெகதீசன் எழுதியுள்ள, "முத்தமிழறிஞர் கலைஞரின் படைப்புகளில் இன-மொழி உணர்வு" எனும் நூலின் வெளியீட்டு விழா நடைபெறுகிறது.

3.1.2026 - சனிக்கிழமை மாலை 5.30 மணி அளவில், சென்னை - கோட்டூர்புரம் - அண்ணா நூற்றாண்டு நூலக வளாகத்தில் - 3-வது தளத்தில் அமைந்துள்ள திறந்தவெளி அரங்கில் நடைபெறும் இவ்விழாவிற்கு - சென்னை மாநகராட்சி 13-வது மண்டலக் குழுத் தலைவர் இரா.துரைராஜ் தலைமை வகிக்கிறார்.

வேளச்சேரி மேற்குப் பகுதிப் பொறுப்பாளர் வே.ஆனந்தம் எம்.சி., பெ.மணிமாறன் எம்.சி., எஸ்.பாஸ்கரன் எம்.சி. ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

பச்சையப்பன் கல்லூரி இணைப் பேராசிரியர் முனைவர் ந.பழனிச்சாமி வரவேற்புரையாற்றுகிறார்.

இவ்விழாவில் - முனைவர் த.ஜெகதீசன் எழுதியுள்ள, "முத்தமிழறிஞர் கலைஞரின் படைப்புகளில் இன - மொழி உணர்வு" எனும் நூலினை, பொதுப்பணி, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு அவர்கள் வெளியிடுகிறார்.

நூலின் முதற்படியினை - சென்னை தெற்கு மாவட்டச் செயலாளரும், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரு மான மா. சுப்பிரமணியன் பெற்றுக் கொள்கிறார்.

இவ்விழாவில் - நாடாளுமன்ற உறுப்பினர்கள் முனைவர் தமிழச்சி தங்கபாண்டியன், மூத்த வழக்கறிஞர் என். ஆர்.இளங்கோ, டாக்டர் கனிமொழி என்.வி.என்.சோமு, சட்டமன்ற உறுப்பினர்கள் ச.அரவிந்த் ரமேஷ், காரம்பாக்கம் க.கணபதி, ப.தாயகம் கவி, ஏ.எம்.வி. பிரபாகரராஜா மற்றும் வழக்கறிஞர் ஆ.சௌந்தர், டெல்லிப் பல்கலைக்கழகப் பேராசிரியர் முனைவர் தி.உமாதேவி, தமிழ்நாடு உயர் கல்வி மன்ற உறுப்பினர் பேராசிரியர் மணிகோ. பன்னீர்செல்வம் ஆகியோர் வாழ்த்துரை வழங்குகின்றனர்.

நிறைவாக - நூலின் ஆசிரியரும் சென்னை தெற்கு மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளருமான முனைவர் த.ஜெகதீசன் நன்றியுரையாற்றுகிறார்.




சென்னை தென்மேற்கு மாவட்டம் மயிலை மேற்கு பகுதி தி.மு.க. சார்பில் என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி ஆலோசனைக் கூட்டம் கே.பி.தாசன் ரோடு சமுதாய நலக்கூடத்தில் நேற்று (02.01.2026– வெள்ளிக்கிழமை) பகுதி செயலாளர் நந்தனம். மதி எம்.சி. தலைமையில் சென்னை தென்மேற்கு மாவட்ட செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ. ஆலோசனை வழங்கினார். உடன் தொகுதி பார்வையாளர் கோ.வி.லெனின், கழக நிர்வாகிகள் ஜி.ஆர்.ராஜேந்திரன், ஆர்.எல்.எல்.வி.அசோக் குமார், பாக்கியதாஸ், அகல்யா விஸ்வநாதன், ஜி.முருகையன், டி. ராஜவேலு, சீ.கிருஷ்ணமூர்த்தி, எஸ்.ஆர்.ராஜா சுரேஷ்குமார், அ.நாகராஜன், மூ.இ. ஏழுமலை, மூ ராஜேந்திரன் மற்றும் அனைத்து (BLA 2 ) பாக முகவர்கள் அனைவரும் கலந்து கொண்டனர்.




தாம்பரத்தில் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தாம்பரம் மாநகர் தெற்கு மாவட்டம் சார்பில் கிறிஸ்துமஸ் நாளில் நாடு முழுவதும் கிறிஸ்துவர்கள் மீது 700க்கும் அதிகமான இடங்களில் வன்முறை தாக்குதல்கள் நடந்தேறியதை தடுக்கத் தவறிய ஒன்றிய அரசை கண்டித்து விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தாம்பரம் மாநகர தெற்கு மாவட்ட கழக செயலாளர் பொறியாளர் ப.சாமுவேல் எபினேசர் தலைமையில் நடைபெற்ற மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் தாம்பரம் மாநகர செயலாளர் எஸ்.ஆர்.ராஜா.எம்.எல்.ஏ., கூட்டணி கட்சி கழக தோழர்களுடன் கலந்து கொண்டு முழக்கங்களை எழுப்பி கண்டன உரையாற்றினார். உடன் 4,வது மண்டலக்குழு தலைவர், பெருங்களத்தூர் வடக்கு பகுதி செயலாளர் டி.காமராஜ் மற்றும் கூட்டணி கட்சி நிர்வாகிகளும் கழக தோழர்களும் பங்கேற்றனர்.